**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070420236249

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 20.01.2023

Accepted: 03.03.2023

Published: 01.04.2023

Citation:
Valarmathi, K. "Methods of Transformation Expressioned by Humans." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 4, 2023, pp. 17–26.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6249

*Corresponding Author:
valarmathi-tam@sfrcollege.edu.in

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Methods of Transformation Expressioned by Humans

**K. Valarmathi**
*Assistant Professor of Tamil*
*The Standard Fireworks Rajaratnam College for Women*
*Sivakasi, Tamil Nadu, India*
*https://orcid.org/0009-0007-9464-1261*

**Abstract**

Transformation is inevitable with time. Language, before its emergence, communicated through gestures, facial expressions, body movements, vocalizations, the throwing of objects, signs, gestures with sticks, whistling, and other such means. Humans communicated their actions to others by encompassing themselves in the realm of sounds. The transformation experienced by humans is influenced by their brain and sensory perceptions. Through actions such as speaking, observing, and listening, individuals exchange information and transform their actions accordingly. In the present era, people have lived as wanderers. Scientific progress has not stagnated. Today, the integration of computers and telecommunications has revolutionized the field of technology, benefiting the general public through transformative work. Currently, emails quickly inform someone in another country. Similarly, electronic money transfers enable the swift transmission of funds to a person in a remote location. It is through transformation that the world continues to progress today.

**Key Words:** Transformation, Communication, Vocalizations (Sound of Voice, Sound of Instruments, Sound of Bells), Gestures, Body Movements, Facial Expressions, Whistling, Signs, Sticks, Conch Shells, Language for Conveying Actions, Acquiring Knowledge through Observation - Acquiring Knowledge through Experience, Speaking in Real-Time, Numbers, Communication through Telegraph - Email - Electronic Money Transfer, Today's World Functions through Transformation.

**References**

1. Amirtha Kauri, A. 1989. *Uraiyadal in Sangha Ilakkiyam*, Chennai, Kavinkalai Achagam.
2. Rasa, K. 2003. *Makkal Thagaval Thodarpiyal Arimugam*. Chennai, Pavi Publications.
3. Ezilazhagan, S.P. 2016. Seithi Ulakam, Chennai, New Century Publications (P) Ltd.,
4. Kannan, K. 1994. *Pandai Tamizharin Oli Unarvum Isai Unarvum*, Chennai, New Century Publications (P) Ltd.,
5. Krishnachami, V. 2001. *Thagaval Thodarpiyal*, Chennai Manivasakar Pathippagam
6. Kodandapani, R. *Idhazhiyal*, Karpa Noolgal, Madurai.
7. Savarimuthu, S. 2002. *Idhazhiyal Makkal Thagaval Iyal*, Chennai, Manimozhi Pathippagam.

# மனிதர்களிடையே செய்திப்பரிமாற்றம் நடைபெற்ற முறைகள்

*கு. வளர்மதி*
*உதவிப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை*
*தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி*
*சிவகாசி*

**ஆய்வுச்சுருக்கம்**
*செய்திப் பரிமாற்றம் காலத்தின் கட்டாயம். கருத்துப் புரட்சிக்கு இன்றியமையாதது. மொழி தோன்றும் முன்பு மனிதன் ஒலிகள், பறையறைதல், மணியடித்தல், புகையெழுப்பல், தீயம்புகளை வானத்தில் எறிதல், கொடிகள், சைகைகள், கூவியழைத்தல் போன்றவற்றின் வாயிலாகத் தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்குச் செய்திகளைத் தெரிவித்தான். காலப்போக்கில் செய்திகளைத் தெரிவிக்க மொழியைப் பயன்படுத்தினான். 'ஓடிச் சென்று அறிவித்தல், உரக்கக் கத்தி அறிவித்தல், நேருக்கு நேர் பேசுதல், எண்கள் – குழூஉக்குறி வழி பேசுதல்" போன்ற வழிமுறைகளைக் கையாண்டான். மனிதர்களிடையே மூளை மற்றும் புலனுணர்வுகளினால் செய்திப் பரிமாற்றம் நடைபெறுகின்றது. மனிதர்கள் பேசுதல், பார்த்தல், கேட்டல் ஆகிய செயல்களால் ஒருவருக்கொருவர் செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். செய்திப்பரிமாற்றம் இன்றேல், மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து கொண்டிருப்பர். அறிவியல் வளர்ச்சி பெருகியிருக்காது. இன்று கணினி, தொலைத் தகவல் தொடர்புத் துறையுடன் இணைந்து செயற்கைக் கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பொதுமக்களுக்கான செய்திப் பரிமாற்றப் பணியில் ஈடுபட்டுள்ளது. இன்று மின்னணு அஞ்சல்* (E-mail) *வாயிலாகச் செய்திகள் வேற்று நாட்டிலுள்ள ஒருவருக்கு விரைவில் அறிவிக்கப்படுகின்றன. அது போல, மின்னணு பணப்பரிமாற்றம்* (Electronic Money Transfer) *மூலமாகத் தொலை தூரத்திலுள்ள ஒருவருக்குப் பணம் அனுப்பும் முறையும் தற்போது நடைமுறையில் உள்ளது. செய்திப் பரிமாற்றத்தினால் தான் இன்றைய உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது.*

***திறவுச் சொற்கள்:*** *செய்திப் பரிமாற்றம், கருத்துப் புரட்சி, ஒலிகள், பறையறைதல், மணியடித்தல், புகையெழுப்பல், தீயம்புகளை வானத்தில் எறிதல், கொடிகள், சைகைகள், கூவியழைத்தல், ஓடிச்சென்று அறிவித்தல், உரக்கக்கத்தி அறிவித்தல், நேருக்கு நேர் பேசுதல், எண்கள், குழூஉக்குறி வழி பேசுதல், மின்னஞ்சல்.*

## மனிதர்களிடையே செய்திப் பரிமாற்றம்

மனிதர்களிடையே நடைபெறும் செய்திப் பரிமாற்றமானது, அஃறிணை உயிரினங்களின் செய்திப் பரிமாற்றத் திலிருந்து வேறுபட்டது. மனிதர்களிடையே மூளை மற்றும் புலனுணர்வுகளினால் செய்திப் பரிமாற்றம் நடைபெறுகின்றது. மனிதர்கள் பேசுதல், பார்த்தல், கேட்டல் ஆகிய செயல்களால் ஒருவருக்கொருவர் செய்திகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். கண்பார்வை இழந்தோரும் தொடுவுணர்வினால் செய்திகளைப் பெறுகின்றனர். இவர்கள் "பிரைலி முறை" மூலம் தடித்த எழுத்துகளை விரல்களால் தடவிச் செய்திகளை அறிந்து கொள்கின்றனர்.

மனிதர்களிடையே செய்திப்பரிமாற்றம் இல்லையெனில், வாழ்க்கையே இல்லை. குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை அளிப்பவர்கள் கூட, தனிமைச் சிறையில் (Solitary Cell) அவர்களை அடைக்கின்றனர். கொடுமையான தனிமை, குற்றவாளிகளைச்

சித்திரவதைச் செய்கின்றது. தனிமையை வெல்வதற்குச் செய்திப்பரிமாற்றமே உதவும். மனிதர்களிடையே ஒலிகள் (குரல்ஒலி, கருவியொலி, மணியொலி), புகையெழுப்பலும் தீயம்புகளும், வண்ணங்கள், ஓவியங்கள், சித்திர எழுத்துகள், கல்வெட்டுகள், செப்பேடுகள், சுவடிகள், தூது, கடிதம், அஞ்சல், சைகை, மெய்ப்பாடு, மொழி ஆகியவற்றின் வாயிலாகச் செய்திப் பரிமாற்றம் நடைபெறுகின்றது.

மனிதனது வளர்ச்சி, மொழியைச் செப்பனிட்டுக் கொள்வதோடு நின்றுவிடவில்லை. ஒலிவடிவத்திற்கு வரிவடிவம் பெறுவதிலும் அதனைப் பலவிதப் பொருட்களில் பொறிப்பதிலும் முன்னேற்றம் கண்டது.[1] என்ற கருத்து இங்கே எண்ணிப்பார்க்கத்தக்கது. மொழியின் தோற்றம் செய்திப்பரிமாற்றத்தில் புதியமாற்றத்தை ஏற்படுத்தியது.

### ஒலிகள்

பழங்காலத்தில் மனிதன் செய்தியை அறிவிப்பதற்கு ஒலிகளைப் பயன்படுத்தினான். அவ்வொலிகளைக் “குரல்ஒலி, கருவியொலி, மணியொலி’ என்று பாகுபடுத்திக் காண இயலும்.

### குரல்ஒலி

பழங்கால மனிதன் தன்னை விலங்குகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள மற்றவர்களின் துணையை நாடி ஒலி எழுப்பினான். பிறரின் கவனத்தை ஈர்ப்பதற்குச் சீழ்க்கை ஒலியைப் பயன்படுத்தினான். சீழ்க்கையடிக்கும் செய்தி குறிஞ்சிப்பாட்டில் (வ.161) காணப்படுகின்றது. இதற்குப் பின் கூவியழைக்கும் முறையை மனிதன் மேற்கொண்டான். கிராமங்களில் பனையேறுபவர்கள் பதனீர் எடுத்த பின்னர் அத்தகவலைத் தெரிவிப்பதற்குக் கூவி அழைக்கின்ற முறை இன்றும் வழக்கில் உள்ளது.

### கருவியொலி

மனிதன் இயற்கை ஒலிகளைக் கேட்டு அவ்வொலி போன்றே முரசு, புல்லாங்குழல், துடி, பறை போன்ற கருவியொலிகளை உருவாக்கி, அதன் வாயிலாகச் செய்திகளை அறிவித்தான். அரச குடும்பத்தினரும் உயர்குலத்தினரும் மக்களுக்குரிய ஆணைகளையும் செய்திகளையும் முரசறைந்தும், ஊர்ப்பொதுச் செய்திகளைத் தண்டோரா போட்டும், துயரச் செய்திகளைப் பறையொலி எழுப்பியும் அறிவித்தனர்.[2] இவ்வாறு, இசைக் கருவிகளின் வேறுபட்ட ஒலியால் செய்தியின் தன்மையை மக்கள் தெரிந்து கொண்டனர்.

வீரர்களைப் போருக்கு அழைக்கவும் போர்க்களத்தில் போர்த்தொடக்கத்தை அறிவிப்பதற்கும் சங்கொலி எழுப்பப்பட்டது. கண்ணன் பாஞ்சசந்நியம் எனும் சங்கினை முழக்கிப் போரினைத் தொடங்கியதாக மகாபாரதம் கூறுகின்றது.

கோவில்களில் பூஜையின்போது சங்கொலி எழுப்பப்படுகிறது. இழவுவீடுகளில் சங்கொலிப்பது மரபாக உள்ளது.[3]

சங்கொலி இறப்பினைத் தெரிவிப்பதைப் பத்திரிகைகள் செய்தியாக வெளியிட்டுள்ளன.

யாராவது இறந்துபோனால் அஞ்சலி செலுத்தும் வகையிலும் தெரிந்தவர்களுக்கு இறந்த செய்தியைத் தெரிவிக்கும் வகையிலும் உரிய பணம் செலுத்திவிட்டால், ஓரிரு மணிநேரத்திற்கு ஒருமுறை மின்சங்கை ஒலிக்கச் செய்வார்கள். “சங்கு ஒலிக்கிறது. இறந்தது யார்?’ என்று பொதுமக்கள் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். சுமார் எட்டு கிலோமீட்டர் சுற்றளவுக்குக் கேட்கும் இந்தச் சத்தம் மிக எளிய, விரைவான இறப்புச்செய்தி பரப்பும் சாதனமாகவும் உள்ளது.[4]

பல்வேறு இசைக்கருவிகளுள் பேரிகையும் ஒன்று. ஆப்பிரிக்கப் பழங்குடிமக்கள் பேரிகை ஒலி மூலம் செய்திகளைப் பரிமாறி வருகின்றனர்.[5]

பேரிகை வாயிலாகச் செய்தியைப் பரிமாறுதல் பிறமக்களிடமும் காணப்படுகின்றது. திருடர்கள் திருடவந்துள்ள செய்தியை அறிவிக்கப் பேரிகையை முழக்கி உள்ளனர்.[6]

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு நேரத்தை அறிவிப்பதற்குச் சைரன் ஒலிக்கப்படுகின்றது. தீயணைப்புவண்டி தீயணைக்கச் செல்லும் போதும், ஆம்புலன்ஸ் விபத்தில் காயமடைந்தவரை அழைத்துச் செல்கின்ற போதும், உயர் அதிகாரிகள் நகரில் செல்கின்ற போதும் ஒளியுடன் கூடிய சைரன் ஒலியோடு செல்வதைக் காணமுடிகிறது. இவ்வாறாக, இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்த மனிதன் இசைக்கருவிகளிலிருந்து பல்வேறுபட்ட ஒலிகளை உருவாக்கி, அவ்வொலி வாயிலாகச் செய்திப்பரிமாற்றத் தேவையை நிறைவு செய்து கொண்டான்.

### மணியொலி

செய்தியை அறிவிப்பதற்கு மணியொலியும் துணை நிற்கின்றது. பாஞ்சாலங்குறிஞ்சியை ஆண்ட கட்டபொம்மன், திருச்செந்தூர் முருகனுக்கு நண்பகல் வழிபாடு முடிந்த செய்தியை நாள்தோறும் தெரிந்து கொள்வதற்காக மணிமண்டபங்களை எழுப்பி மணியொலிக்கச் செய்தான். மதுரையை ஆண்ட திருமலைநாயக்கர், ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாளுக்கு இரவு வழிபாடு முடிந்த செய்தியினை அறிந்து கொள்வதற்காக மதுரையிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வரையிலும் மணி மண்டபங்களை எழுப்பி மணியொலிக்கச் செய்தார்.[7]

கோவில்களில் பூசை நடக்கிறது என்பதை உணர்த்த மணி ஒலிக்கப்படுகின்றது. தேவாலயங்களில் அழைப்பொலியாக மணியடிக்கப்படுகின்றது. பள்ளி, கல்லூரிகளில் மாணாக்கருக்கு நேரத்தை அறிவிப்பதற்கு மணியடிக்கின்றனர்.

தமிழகத்தில் கிறித்துவமதத்தைப் பரப்ப வந்த புனிதசேவியர், மக்களைக் கவர்ந்திழுக்க மணியொன்றை ஒலித்தவண்ணம் வீதிகளில் வலம் வந்தார். இதனால் மக்கள் இவரை "மணியோசை சாமியார்" என்று அழைத்தனர்.[8]

கன்றை இழந்த தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை ஒலிக்கச்செய்து நீதி கேட்டமை மனுநீதிசோழன் வரலாற்றில் உள்ளது. இன்றும் கூட பஞ்சுமிட்டாய் விற்பவர் மணியடித்துக் கொண்டே வருவதையும் ஐஸ் மற்றும் பால்விற்பனை செய்பவர்கள் தங்கள் வருகையினை மணியொலி மூலம் தெரிவித்துத் தம் தொழிலை மேற்கொள்வதையும் காணமுடிகிறது.

### புகையெழுப்பலும் தீயம்புகளும்

பழங்கால மனிதன் நெருப்புப் புகைத்தல், தீயம்புகளை வானத்தில் எறிதல் போன்ற குறியீடுகள் வழியாகச் செய்திகளைத் தெரிவித்துவந்தான். மலைவாழ் மக்கள் தாங்கள் கொண்டாடும் திருவிழாவைப் பிறமலைகளில் வாழும் மக்களுக்குத் தெரிவிக்க வானத்தில் தீயம்புகளை ஏவியுள்ளனர்.[9]

இன்றும் சதுரகிரி என்று அழைக்கப்படும் மஹாலிங்க மலைக்கு அமாவாசை தினத்தன்று செல்லும் பக்தர்கள் வழிநெடுக தீப்பந்தத்தை ஏந்திச் செல்வதைக் காணமுடிகிறது. இச்செயல் பாதையினைக் காட்டுவதோடு, மஹால்ய அமாவாசை சிறப்பு வழிபாட்டினையும் தெரிவிக்கின்றது.

அமெரிக்கநாட்டுக் காட்டு மக்களிடையே புகை, நெருப்பு ஆகியவற்றின் மூலம் சில

செய்திகளைக் குறிப்பிடுகின்ற முறையும் இருந்திருக்கிறது.[10] இம்முறை இன்றும் மக்களிடையே வழக்கில் காணப்படுகின்றது.

**வண்ணங்கள்**

வண்ணங்களும் செய்திப்பரிமாற்றத்திற்குத் துணை நிற்கின்றன. இந்தியரிடம் வெள்ளைநிறம் சமாதானத்தையும், சிவப்புநிறம் ஆபத்தையும், கருமைநிறம் துக்கத்தையும், மஞ்சள்நிறம் மங்கலத்தையும் குறிக்கின்ற வண்ணமாகக் காணப்படுகிறது. ஆனால் சீனாவில் வெள்ளை நிறமும், துருக்கியில் நீலநிறமும், எகிப்தில் மஞ்சள் நிறமும் துக்கத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.[11]

வெள்ளை உடையைத் தாதியரும் மருத்துவர்களும், காவிஉடையைத் துறவிகளும் பயன்படுத்துகின்றனர். போர்வீரர்கள் மற்றும் மாணாக்கரின் சீருடை நிறம், அவர்கள் சார்ந்துள்ள நாட்டையும் பள்ளியையும் தெரிவிப்பனவாக உள்ளன. காவல்துறையினர், வழக்கறிஞர்களின் சீருடை அவர்களின் தொழிலை அறிவிக்கின்றன.

வண்ணக்கொடிகளும் வண்ணவிளக்குகளும் செய்திப்பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன. கப்பல் பயணத்தில் மாலுமிகள் வண்ணக் கொடிகளை மேலும் கீழும் அசைத்துத் துறைமுகத்தினருடன் தொடர்பு கொள்கின்றனர். புகைவண்டி நிலையங்களில் புகைவண்டி புறப்படுவதற்குப் பச்சைக் கொடி காட்டுகின்றனர். தண்டவாளங்களில் ஆபத்து நேருமாயின் சிவப்புக்கொடி காட்டி அறிவிக்கின்றனர்.

மொகலாயமன்னர் ஜஹாங்கீர், தம் மனைவிக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறிய டில்லியிலிருந்து ஆக்ரா வரையிலும் சிவப்பு, பச்சைக்கொடடிகளை ஏந்திய வீரர்களை நிறுத்தினார். ஆண்குழந்தையாயின் சிவப்புக்கொடியையும் பெண்குழந்தையாயின் பச்சைக்கொடியையும் காட்ட வேண்டும் என்று ஆணையிட்டிருந்தார்.[12]

பல்வேறு அரசியல் கட்சியினரும் தத்தமக்கென்று வெவ்வேறு வண்ணக் கொடிகளைக் கொண்டுள்ளனர்.

புகைவண்டி நிலையங்களில் இரவு நேரங்களில் புகைவண்டி புறப்படுவதற்குப் பச்சை விளக்கை உயர்த்திப் பிடித்து அசைக்கின்றனர். சுடலை விதிமுறைகளுக்கு வண்ணவிளக்குகளைப் பயன்படுத்துகின்றனர்.

சாலைச் சந்திப்பில் பச்சைவிளக்கு எரிந்தால், வாகனங்கள் தொடர்ந்து செல்லலாம் என்றும் சிவப்புவிளக்கு எரிந்தால், வாகனங்கள் நிற்கவேண்டும் என்றும் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. சீனாவில் வாகனங்கள் தொடர்ந்து செல்வதற்குச் சிவப்புவிளக்கு பயன்படுத்தப்படுகின்றது.[13]

வண்ண வேறுபாடுகளைக் கொண்டு கொடி, விளக்கு ஆகியவற்றின் துணையோடு செய்திப்பரிமாற்றம் நிகழ்த்தப்படுகின்றது.

**ஓவியங்கள்**

தொடக்கக் காலத்தில் மனிதனின் சிந்தனைகள் ஓவியம், சித்திர எழுத்து போன்றவை மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. பழங்கால மனிதன், தன் எண்ணங்களைத் தான் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களாக வரைந்து அதன்வழிச் செய்திகளைப் பரிமாறினான்.

பொருளைக் குறிக்க வரைந்த ஓவியம் “ஓவிய எழுத்து” அல்லது “சித்திர எழுத்து” எனப்பட்டது. ஓவிய எழுத்து முறைக்குச் சீனமொழி எழுத்து நெருக்கமானது. சீனமொழியில் சூரியனை எழுத வேண்டுமானால், ஒரு வட்டம் போட்டு அதனுள் ஒரு புள்ளி எழுதுகிறார்கள். அப்படியே ஒரு வளைவு

போட்டு அதில் ஒரு கோடு எழுதினால், சந்திரன் என்று பொருள் ஆகும். சூரியன், சந்திரன் இரண்டும் சேர்ந்து எழுதினால் வெளிச்சம் என்று பொருளாகும் என்பது இங்கே கருதத்தக்கது. இவ்வாறு, மனிதன் தன் அறிவுக்கு எட்டிய அளவில் செய்திகளை ஓவியங்கள் வழியாக அனைவருக்கும் தெரிவித்த செய்திப்பரிமாற்ற முறைமை இங்குப் புலனாகின்றது.

**கல்வெட்டுகள், செப்பேடுகள், சுவடிகள்**

பாறைகளிலும் குகைகளிலும் கல்லிலும் வெட்டப்பட்ட எழுத்துகள் "கல்வெட்டுகள்" எனப்படும். கி.மு.3ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அசோகர் காலத்தில் கற்றூண்களிலும் கற்பாறைகளிலும் தகவலைச் செதுக்கி வெளியிட்டனர்.[14] செய்திகளைக் காலத்தால் அழியாத கல்லில் பதிவு செய்து, அதற்கு நிலையான வடிவத்தைக் கொடுத்தல் சிறந்த செய்திப்பரிமாற்றம் ஆகும்.

செப்புத் தகடுகளையும் செய்திப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தினர். மன்னராட்சி காலத்திலிருந்த படை பற்றிய விவரங்கள், நீதி முறை, கோவில் வழிபாடு, நாட்டு எல்லை, மக்கள்மன்ற வழக்குகளின் தீர்ப்புகள், சமுதாயக் கடமைகள், சமய வழக்காறுகள், தல புராணங்கள் போன்ற செய்திகளைச் செப்பேடுகள் வாயிலாக அறியமுடிகிறது. மருத்துவச் செய்திகளும் செப்பேடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. செப்பேடுகளும் நிலையான தகவல் பதிவுகளாக அமைந்து, தமிழனின் செய்திப்பரிமாற்றச் சிந்தனைக்குச் சிறந்த சான்றுகளாகத் திகழ்கின்றன.

செய்திகளைப் பதிவு செய்வதில் சுவடிகள் முக்கிய இடம்பெறுகின்றன. தமிழ்நாட்டில் பனையோலைகளில் செய்திகளைப் பதிவு செய்தனர். சுவடிகளில் இலக்கியங்கள், இலக்கணங்கள், மருத்துவக் குறிப்புகள், நாட்டியக் குறிப்புகள், மன்னரின் பெருமைகள், போர் நிகழ்ச்சிகள், அரச பரம்பரை, நிர்வாக அமைப்பு முறை, கொடைச் சிறப்பு, வள்ளல் தன்மை, மழை வளம், இறைவன் அவதாரம், தலப் பெருமைகள், சோதிடக் குறிப்புகள், நாடி சாத்திரங்கள் போன்ற செய்திகள் எழுதப்பட்டன.

அரசர்களுக்கிடையில் தூதுவர்கள் ஓலைச்சுவடிகள் வழியாகச் செய்திகளைக் கொண்டு சென்றனர். போர்க்காலங்களில் படைத்தலைவர்கள் வேகமாகச் செய்திகளை அனுப்புவதற்கு, செய்தி எழுதப்பட்ட ஓலைச்சுருளைப் புறாவின் காலில் கட்டி அனுப்பினர். இமாம்காபீ என்னும் இசுலாமிய சட்டஅறிஞர் ஈச்சஓலையில் தகவல்களைப் பதிவுசெய்துள்ளார்.[15]

ஓலைச்சுவடியைப் போன்றதொரு அமைப்பின் வாயிலாகவே சீனாவிலும் செய்திப்பரிமாற்றம் நடைபெற்றுள்ளது.

சீனாவில் மூங்கில்பட்டைகளை ஒரே அளவாகச் சீர்ப்படுத்தி மூலையில் துளையிட்டு, நூலினால் கட்டிப் புத்தகமாக அமைத்துக் கொண்டனர்.[16]

ஓலைச்சுவடிகளைப் போன்ற பிறபொருட்களைப் பயன்படுத்தியும் செய்திப்பரிமாற்றம் நடைபெற்றுள்ளது.

இரண்டாம் உலகப்போர் நடந்தபோது காய்ந்த வாழைமட்டைச் சருகு, பனையோலை முதலிய நறுக்குகளில் சினிமா நோட்டீஸ் அச்சடித்து விளம்பரம் செய்தனர்.[17]

**தோல், பட்டு**

விலங்குகளின் தோல், பட்டுத்துணி போன்றவற்றிலும்; செய்திகளைப் பதிவு செய்தான்.

மத்தியதரைக் கடலோர நாடுகளில் விலங்குகளின் தோலை எழுதுவதற்குப் பயன்படுத்தினர். பதப்படுத்திய ஆட்டின்தோல் அல்லது கன்றுக்குட்டியின் தோலிலும் எழுதினர்.[18]

தமிழ்நாட்டினர் முக்கியமான செய்திகளைப் பட்டுத் துணிகளில் வண்ணக் குழம்பினால் எழுதினர். இதனைப் பட்டோலை என்பர். சஹாக் பரம்பரையினரின் ஆட்சிக்காலத்தில் (கிமு.206-220) பட்டுத்துணியில் பறவையின் இறகுத்தூரிகையினால் எழுதும் வழக்கமும் நிலவியது.[19]

எடுத்துச் செல்வதற்கு எளிதான தோல், பட்டு வாயிலாகச் செய்திப்பரிமாற்றம் நடைபெற்றுள்ளது.

**தூது, கடிதம், அஞ்சல்**

பண்டைக்காலத்தில் புறாவின் காலில் செய்தி எழுதப்பட்ட சீட்டினைக் கட்டித் தூது அனுப்பினர்.

புயலும் வெள்ளமும் அடிக்கடி வரும் கடலோரப்பகுதிகளில் பெல்ஜியன் ஹோமர் புறாக்கள் தகவல்தொடர்புக்கு 1946ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்தப்படுகின்றன. 1982இல் ஏற்பட்ட வெள்ளத்திலும் 1999இல் ஏற்பட்ட சூறாவளியிலும் பெருமளவு புறாக்களே தகவல் சேவையில் பயன்படுத்தப்பட்டன.[20]

ஒரிஸாமாநிலத்தில் கடிதப் போக்குவரத்திற்குக் கிளிகளைப் பயன்படுத்துகிறார்கள். 1946ஆம் ஆண்டு கிளிகளை வைத்துத் தபால் பட்டுவாடா செய்யும்முறை அறிமுகப்படுத்தப்பட்டது.[21]

ஔரங்கசீப் காலத்தில் செய்தியாளர்கள் அனுப்பிய செய்திக்கடிதங்கள், அரச சபையில் நடுஇரவு வரை பெண்களால் படிக்கப்பட்டன.[22]

ரோம் நகரத்து நிகழ்ச்சிகளை எழுத்தர்கள் எழுதித் தொலைவிலுள்ள அரசியல் தலைவர்களுக்கும் பெரும் வணிகர்களுக்கும் செய்திக் கடிதங்களாக அனுப்பி வைத்தனர். கடிதங்களை எடுத்துச் செல்வதற்குக் குதிரை வீரர்கள் பயன்படுத்தப்பட்டனர். அதுவே தொடர் வழக்காகி அஞ்சல்வழிச் செய்திக்கு அடிகோலியது.

செய்திகளை ஒருவருக்கொருவர் எழுத்து வழியாகப் பரிமாறிக் கொள்வதை அஞ்சல்துறை நோக்கமாகக் கொண்டுள்ளது. பிரிட்டனில் மன்னருடைய செய்திகளையும் அரசு ஆணைகளையும் விரைவில் எடுத்துச் செல்வதற்கு ஆட்களையும் குதிரைகளையும் ஏற்பாடு செய்யும் நிறுவனங்கள் ஆங்காங்கு நிறுவப்பட்டன. இவையே பிற்காலத்தில் அஞ்சல் அலுவலகங்கள் என வழங்கலாயின. 1635ஆம் ஆண்டில் பிரிட்டனில் பொதுமக்களின் கடிதங்களையும் அரசு அஞ்சல்காரர்கள் கொண்டு செல்லத் தொடங்கினார்கள் என்பார், பி.வி.கிரி.

இந்தியாவில் முதன்முறையாக அஞ்சல் சேவையை 1766இல் கவர்னர்ஜெனரலாக இருந்த இராபர்ட்கிளைவ் அறிமுகப்படுத்தினார். முறையான அஞ்சல்துறை அமைப்பு 1837இல் கிழக்கிந்தியக் கம்பெனியால் தொடங்கப்பட்டது. 1854ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1ஆம் தேதி சட்டத்தின் வழியாக அஞ்சல்துறை அரசின் தனித்துறையாகச் சீரமைக்கப்பட்டது.[23]

அஞ்சல்துறை நவீனத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்திக் கடிதங்களை விரைவாக அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளது. கொரியர் சேவை போன்ற தனியார் நிறுவனங்களும் கடிதப் போக்குவரத்திற்குத் துணைபுரிகின்றன.

இன்று மின்னஞ்சல் (E&mail) வாயிலாகச் செய்திகள் வேற்றுநாட்டிலுள்ள ஒருவருக்கு விரைவில் அறிவிக்கப்படுகின்றன. அதுபோல, மின்னணு பணப்பரிமாற்றம் (Electronic Money Transfer) மூலமாகத் தொலைதூரத்திலுள்ள ஒருவருக்குப் பணம் அனுப்பும் முறையும் தற்போது நடைமுறையில் உள்ளது.

## மொழிவழிச் செய்திப் பரிமாற்றம்

மொழி தோன்றுவதற்கு முன்பு மனிதன் தன் மனக் கருத்துகளைச் சைகை வாயிலாகத்; தெரிவித்தான். சைகை வழியாகச் செய்திகளைப் புலப்படுத்தும் போது, பார்வையாளர்களின் கவனத்தைத் தன்வயப்படுத்துதல் இன்றியாமையாததாகும். கண்பார்வையுடைய காது கேளாதோர் மற்றும் வாய்பேச முடியாதோரின் செய்திப்பரிமாற்றத்திற்குக் கைவிரல் அசைவுமொழி பயன்படுத்தப்படுகின்றது.

ஒருமனிதனிடம் அன்பை வெளிப்படுத்தும் போது சோகமுடனோ, துயரத்துடனோ சொல்லக் கூடாது. அதுபோல ஒருவர் இறந்தார் என்பதை மகிழ்ச்சியாகவோ, சிரித்துக் கொண்டோ சொல்லக் கூடாது. அன்பையும் துயரத்தையும் பரிமாற்றம் செய்யும் போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். இல்லையேல், இருவரிடையே உள்ள அன்பு முறிந்து பகைமை வளர்ந்துவிடும். பேசும் போது கோபமூட்டக்கூடிய பார்வை, தேவையற்ற அசைவு ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

மனிதன் தன் கருத்தைச் சொல்ல உணர்ச்சியால் ஒலியை எழுப்பி, கைகளால் சைகை காட்டிச் சித்திரத்தால் சித்தரித்து, அதனையே கருத்திற்கு அடையாளமாக்கி, அதன் பின்பு சொற்களைத் தனித்தனியே சொல்லத் தொடங்கி மொழியை உருவாக்கினான்.[24]

மொழியை உருவாக்கிய மனிதன், மொழிவழிச் செய்திகளைப் பரிமாறினான். "ஓடிச்சென்று அறிவித்தல், உரக்கக்கத்தி அறிவித்தல், நேருக்குநேர் பேசுதல், எண்கள் - குழூஉக்குறி வழி பேசுதல்" போன்ற வழிமுறைகளைக் கையாண்டான்.

### ஓடிச்சென்று அறிவித்தல்

ஒருவன் தான் அறிந்த செய்தியை ஓடிச்சென்று மற்றொருவரிடம் அறிவிப்பதே, "ஓடிச்சென்று அறிவித்தல்" எனப்படும். இம்முறையில் குறிப்பிட்ட ஓர் இடத்திலிருந்து குறிப்பிட்ட தூரத்திற்குப் பலர் நிறுத்தப்படுவார்கள். முதலில் செய்தியை அறிந்தவர் ஓடிச் சென்று அச்செய்தியை அடுத்தவரிடம் தெரிவிப்பார். இரண்டாவதாக நிற்பவர் தானறிந்த செய்தியை அடுத்தவரிடம் ஓடிச்சென்று தெரிவிப்பார். ரோமாபுரியின் மன்னரான ஜீலியஸ்சீசர் இம்முறையிலேயே செய்தியை நாடுமுழுவதும் பரப்பினார்.[25]

இன்றும் சற்றுதூரத்தில் செல்பவரிடம் ஓடிச்சென்று செய்தியைக் கூறும்முறை வழக்கத்தில் உள்ளது.

### உரக்கக்கத்தி அறிவித்தல்

ஒருவர் அறிந்த செய்தியைப் பிறருக்குக் கேட்கும்படி உரக்கக்கத்தி அறிவித்தலே, "உரக்கக்கத்தி அறிவித்தல்" எனப்படும். பாரசீக நாட்டை ஆண்ட டேரியஸ் என்ற மன்னன், அரசாங்கத்தின் ஆணைகளை மக்களுக்கு அறிவிக்க ஒரு புதியஉத்தியைக் கையாண்டான். அருகருகே உள்ள மலைகளின் உச்சியில் உரத்த குரல்வளம் படைத்த மனிதர்களை நிற்கச் செய்வான். முதல் மலையின் உச்சியில் நிற்கும் மனிதன் தன்னுடைய ஆணைகளை, அடுத்த மலைஉச்சியில் நிற்பவனின் காதுகளில் விழும்படி தெரியப்படுத்துவான். இரண்டாவது மலைஉச்சியில் நிற்பவன் அந்தச் செய்தியைக்கேட்டு மூன்றாமவனுக்குத் தெரியப்படுத்துவான்.[26]

### நேருக்குநேர் பேசுதல்

ஒருவர் இன்னொருவரிடமோ அல்லது பலரிடமோ பேசுதல் "நேருக்குநேர் பேசுதல்"

எனப்படும். பெண்கள் ஆற்றிலும் குளத்திலும் கிணற்றிலும் நீர் எடுத்துவரச் செல்லும் போது நேருக்குநேர் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். பழங்காலத்தில் கிரேக்க அறிஞர் சாக்ரடீசு தெருக்கோடியில் நின்று தம் கருத்துகளைப் புலப்படுத்தியதையும், இயேசுபிரான் மலைக்குன்றின் மீது அமர்ந்து மக்களுக்குப் போதனை செய்த மலைப்பிரசங்கத்தையும் சான்றாகக் கூறமுடியும். கிறித்தவப் போதனையாளர்கள், அரசியல்வாதிகள் போன்றோர் தெருக்கோடியில் நின்று செய்திகளைத் தெரிவித்தனர். பிற்காலத்தில் மேடைபோட்டு மக்களிடையே நேருக்குநேர் பேசும் நிலை ஏற்பட்டது.

### எண்கள் - குழூஉக் குறி

மனிதன் தன்னுடைய எண்ணங்களை வெளிப்படுத்த எண்களைப் பயன்படுத்தியிருக்கின்றான். நைசீரியப் பழங்குடிஇன ஆண்மகன் திருமணத்திற்காக அவ்வினத்தைச் சேர்ந்த ஒருபெண்ணைப் பார்த்து ஆறு என்று சொன்னால், அதற்குப் பொருள் நான் உன்னை விரும்புகின்றேன் என்பதாகும். அப்பெண் முகம்சிவக்க முறுவலித்து எட்டு என்று எதிர்மொழி கூறினால், நானும் அவ்வாறே நினைக்கின்றேன் என்பதை உணர்த்துவதாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுருக்கமாக விவரமறிய முயற்சிப்பவர் “குழூஉக் குறி” மூலம் செய்திகளைப் பரிமாறிக் கொள்வர். பொன்வேலை செய்பவர்கள், வியாபாரிகள், தரகர்கள் போன்றோர் இன்றும் தங்களுக்கென்று குழூஉக்குறியை ஆதாரமாகக் கொண்டு செய்திகளைப் பரிமாறிக் கொள்கின்றனர்.

### தொகுப்புரை

ஒருவரிடமிருந்து மற்றவருக்குச் செய்தியைப் பரப்புவதே செய்திப்பரிமாற்றம் ஆகும். இச்செய்திப்பரிமாற்ற முறை மனிதன் தோன்றிய காலம் முதல் இருந்து வருகின்றது. மனிதன் தன் மன எண்ணங்களைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளாமல் இருத்தல் என்பது இயலாத ஒன்றாகும். வாழ்வின் எல்லா நிலைகளிலும் பிறருடன் தொடர்பு கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. எனவே, மனிதவாழ்வில் செய்திப்பரிமாற்றம் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளமை புலனாகின்றது. மனிதனை முழுமனிதனாக ஆக்குவது, செய்திப் பரிமாற்றமே ஆகும். பழங்காலத்தில் மக்கள் ஒலிகள், பறையறைதல், மணியடித்தல், புகையெழுப்பல், தீயம்புகளை வானத்தில் எறிதல், கொடிகள், சைகைகள், கூவியழைத்தல் போன்றவற்றின் வாயிலாகச் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர். மக்கள் கூடிவாழத் தலைப்பட்ட போது ஒருவர் கருத்தை மற்றவர்களுக்குக் கூற மொழியைக் கருவியாக்கிக் கொண்டனர். மொழியை உருவாக்கிய மனிதன், ஓடிச் சென்று அறிவித்தல், உரக்கக்கத்தி அறிவித்தல், நேருக்குநேர் பேசுதல், எண்கள் - குழூஉக்குறி போன்ற வழிமுறைகளைப் பின்பற்றிச் செய்திகளைப் பரிமாறினான். ஒலிக்கு வரி வடிவம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் செய்திகளைப் பதிவு செய்யும் முறை தொடங்கியது. செய்திகளைக் கல்வெட்டுகள், செப்பேடுகள், சுவடிகள், தோல், பட்டு போன்றவற்றில் பதிவு செய்தனர். அறிவியல் வளர்ச்சி பெருகியிருக்காது. இன்று கணினி, தொலைத் தகவல் தொடர்புத்துறையுடன் இணைந்து செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திப் பொதுமக்களுக்கான செய்திப் பரிமாற்றப் பணியில் ஈடுபட்டுள்ளது. செய்திப் பரிமாற்றத்தினால் தான் இன்றைய உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது இக்கட்டுரை வழி புலனாகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. மா.சு.சம்பந்தன், அச்சும் பதிப்பும், 1997, ப.26
2. எஸ். ஆரோக்கிய நாதன், தகவல் தொடர்பியல், 1993, ப.22
3. மேலது, ப.22-23
4. தினமலர், 1-9-2002, ப.14
5. தினமணி, 16.6.1989

6. வெ.கிருட்டிணசாமி, மு.நூ., ப.17
7. மேலது, ப.24
8. எஸ்.ஆரோக்கிய நாதன், மு.நூ., ப.28
9. வெ.கிருட்டிணசாமி, மு.நூ., ப.15
10. மேலது, ப.13
11. எஸ்.ஆரோக்கியநாதன், மு.நூ., ப.28
12. வெ.கிருட்டிணசாமி, மு.நூ., ப.24
13. எஸ்.ஆரோக்கிய நாதன், மு.நூ., ப.28
14. வெ.கிருட்டிணசாமி, மு.நூ., ப.27
15. மேலது, ப.27
16. எஸ்.ஆரோக்கிய நாதன், மு.நூ., ப.75
17. தினமலர், 04.08.2002, ப.7
18. எஸ்.ஆரோக்கிய நாதன், மு.நூ., ப.75
19. மேலது, ப.75
20. தினமலர் - சிறுவர்மலர், 19.07.2002, ப.9
21. வெ.கிருட்டிணசாமி, மு.நூ., ப.23
22. இரா.கோதண்டபாணி, இதழியல், 1980, ப.7
23. தினமணிச் சுடர், 03.10.1992, ப.19
24. மா.சு.சம்பந்தன், மு.நூ., ப.26
25. ஆனந்தன், தகவல் தொடர்பியல், 1990, ப.11
26. மேலது, ப.9

**துணைநூற் பட்டியல்**

1. அமிர்த கௌரி, ஆ. 1989. *சங்க இலக்கியத்தில் உரையாடல்*, கவின்கலை அச்சகம், சென்னை.
2. இராசா, கி., 2003. *மக்கள் தகவல் தொடர்பியல் - அறிமுகம்*, சென்னை, பாவை பப்ளிகேஷன்ஸ்.
3. எழிலழகன், எஸ்.பி. 2016. செய்தி உலகம், சென்னை. நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட்.
4. கண்ணன், கோ. 1994. *பண்டைத் தமிழரின் ஒலி உணர்வும் இசை* உணர்வும், சென்னை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி)லிட்.
5. கிருட்டிணசாமி, வெ., 2001. *தகவல் தொடர்பியல்*, சென்னை, மணிவாசகர் பதிப்பகம்.
6. கோதண்டபாணி, இரா., - இதழியல், மதுரை, கற்பக நூல்கள்.
7. சவரிமுத்து, சா. 2002. *இதழியல் மக்கள் தகவலியல்*, சென்னை, மணிமொழி பதிப்பகம்.